# பிரதான தரவு ஆவணம்

## அமானா கிட்ஸ் தவணை முதலீடு

| | |
|---|---|
| தகைமை | • ஆரம்ப ஆகக்குறைந்த வைப்பு ரூ. 50,000/-<br>• வாடிக்கையாளர் தவணை முதலீட்டுக்கான தகைமையை பெறுவதற்கு, அமானா வங்கி கிட்ஸ் சேமிப்பு கணக்கில் பேணப்பட வேண்டிய ஆகக்குறைந்த மீதித் தொகை ரூ. 250,000/- ஆக காணப்படல்.<br>• எந்தவொரு அமானா கிட்ஸ் கணக்குதாரரும் ஆகக்கூடிய வயது 17 வருடங்களாக இருத்தல்.<br>• செயலிலுள்ள நிலையான கட்டளையுடன் அமானா கிட்ஸ் கணக்கொன்றை கொண்டிருத்தல் |
| தயாரிப்பு விளக்கம் | 'அமானா கிட்ஸ் தவணை முதலீடு' எமது சிறுவர் பிரிவுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டது, ரொக்க முதலீட்டுடன் தமது பிள்ளைகளின் நிதிசார் எதிர்காலத்தை பாதுகாத்துக் கொள்ள எதிர்பார்க்கும் பெற்றோருக்கான சிறந்த தெரிவாக அமைந்திருக்கும் என நாம் நம்புகிறோம். நீங்கள் நம்பிக்கையுடன் முதலீடு செய்யலாம் என்பதுடன், உங்களின் முதலீட்டிலிருந்து சிறந்த வருமதிகள் கிடைக்கும் என்பது தொடர்பில் உறுதியாக இருக்கலாம். எமது பிளெக்ஸி (Flexi) தவணைத் திட்டத்தைப் போன்று, இந்தத் திட்டத்திலும் எந்நேரத்திலும் பணத்தை வைப்புச் செய்யும் வசதி வழங்கப்படுகிறது. |
| உள்ளம்சங்கள் | • மேலதிக நிதியை சேவைப் பகுதி வைப்புகள், பண வைப்பு இயந்திரங்கள், பணப் பரிமாற்றங்கள் அல்லது வெளிநாட்டு பண அனுப்புகைகளினூடாக எந்நேரத்திலும் வைப்புச் செய்யலாம்.<br>• உயர்ந்த இலாபப் பங்கை பெறுங்கள்<br>• மாதாந்தம் பெறும் இலாபத்தை மீள முதலீட்டு செய்யலாம் அல்லது இலாபத்தை சாதாரண கிட்ஸ் சேமிப்புக் கணக்கிற்கு மாற்றலாம்<br>• பிள்ளை 18 வயதை எய்திய பின்னர் தவணை முதலீடு முதிர்வடையும் |
| தேவையான ஆவணங்கள் | • பெற்றோர்/பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை / கடவுச்சீட்டு / சாரதி அனுமதிப் பத்திரம்<br>• பிள்ளையின் பிறப்பு சான்றிதழ்<br>• கிட்ஸ் சேமிப்புக் கணக்கிற்கான நிலையான கட்டளை நிறுவிய ஆதாரம்<br>• அருகிலுள்ள கிளைக்கு விஜயம் செய்யவும் அல்லது இணையத்தளத்திலிருந்து டவுன்லோட் செய்வதற்கு: https://www.amanabank.lk/application-downloads.html |
| கட்டணங்கள் மற்றும் கூலி | தற்போதைய கட்டணங்கள் மற்றும் கூலிகள் எமது நிறுவன இணையத்தளத்தில் காணப்படும்: https://www.amanabank.lk/tariff-services.html |
| நியதிகள் மற்றும் நிபந்தனைகள் | தயாரிப்பின் தகவல்கள் மற்றும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் போன்றன காலா காலத்தில் மாறுபடும். எனவே, பிந்திய தகவல்கள் மற்றும் தற்போது அமலிலுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றி அறிந்து கொள்வதற்கு அருகிலுள்ள கிளையுடன் தொடர்பு கொள்ளவும் அல்லது எமது நிறுவன இணையத்தளத்தை பார்க்கவும்:<br>https://www.amanabank.lk/pdf/application-downloads/general-business-conditions.pdf |

| | |
|---|---|
| காப்புறுதி வலையமைப்பு | இலங்கை மத்திய வங்கியினால் செயற்படுத்தப்படும் இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டத்தின் அங்கத்தவராக அமானா வங்கி திகழ்கின்றமையினால், ஒரு வைப்பாளருக்கு ரூ. 1.1 மில்லியன் வரையான தகைமை வாய்ந்த வைப்புகளுக்கு பாதுகாப்பு வழங்கப்படுகிறது. |
| கருத்தளிப்புகள் மற்றும் முறைப்பாடுகள் | எமது வாடிக்கையாளர் தீர்வுகள் நிலையத்துடன் 24x7 நேரமும் நீங்கள் தொடர்பு கொண்டு, உங்கள் கருத்துகளையும், முறைப்பாடுகளையும் மேற்கொள்ளலாம். உங்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக எமது அணியினர் தயாராக இருப்பார்கள்.<br><br>வாடிக்கையாளர் தீர்வு நிலைய இலக்கம் :+94 11 7 756 756<br>மின்னஞ்சல்: info@amana.lk \| feedback@amana.lk<br>எமது இணையத்தளத்தில் உங்களின் விசாரணைகளை சமர்ப்பிப்பதற்கு www.amanabank.lk<br><br>எவ்வாறாயினும், உங்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படாவிடின், பின்வரும் முகவரிக்கு தபால் மூலமாக அல்லது மின்னஞ்சல் ஊடாக தொடர்பு கொள்ளலாம்:<br>The Manager - Service Quality Assurance<br>Amana Bank,<br>No. 486, Galle Road, Colombo 03<br>அல்லது e-mail<br>servicequality@amana.lk |
| | அதன் பின்னரும் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படாவிடின், சுயாதீன நிதி குறைகேள் அதிகாரியின் சேவைகளை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். நிதிசார் குறைகேள் அதிகாரியின் பின்வரும் அலுவலகத்துடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.<br><br>Financial Ombudsman,<br>No.1, Bethesda Place, Milagiriya, Colombo 04.<br>Telephone: + 94 11 2595624 Fax: +94 11 2595625 |